பாம்பன் ஸ்வாமிகள்
பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

அக்டோபர் 2013 ✿ விலை ரூ. 15/-



# பாடும் பணியே பணியாய் அருளப்பெற்ற ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்

அறுமுகப் பரமனுக்கு உரிய ஆறெழுத்து மந்திரத்தை சேதுமாதவ ஐயரிடம் உபதேசம் பெற்றவர் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள். குரு உபதேசித்து அருளிய வண்ணம் நாள்தோறும் முறைப்படி மூன்று வேளைகளிலும் தீவிர ஈடுபாட்டுடன் மந்திர ஜபத்தில் சுவாமிகள் ஈடுபட்டு வந்தார். ஜபம் நடைபெறாத மற்றைய நேரங்களில் வியாபாரப் பணியையும் நன்கு நிறைவேற்றிக் கொண்டு பாடற்பணியிலும் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். சுவாமிகளின் சிந்தனைப் போக்கிற்கு ஏற்றவாறு இயற்கைச் சூழலும் வாய்த்திருந்தது. பாம்பன் ஊரிலுள்ள குளக்கரை, கடற்கரை, வெண்மணற் பரப்பு, நெடிதுயர்ந்து செறிந்திருந்த தென்னந்தோப்புகள், கடற்கரையைச் சார்ந்துள்ள உப்பங்கழிகள், மணற்குன்றுகள், மேலே ஆகாயத்தில் மிதந்து செல்லும் மேகக் கூட்டங்கள், ஆகியவையெல்லாம் அவரது உள்ளத்தில் தெய்விகமான கோலங்களை உருவாக்கிக் கொண்டிருந்தன. இரவு நேரத்தில் மணற்பாங்கான இடத்துக்குச் சென்று ஏகாந்தமாக இருந்து மனம் கசிந்து கசிந்து கரைய வெளியை நோக்கிக் கொண்டிருப்பார். செவ்வேட் பரமனைச் சிந்தித்துச் சிந்தித்து "“என் அப்பனே! எளியவனாகிய எனக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும்? எனது வாழ்நாள் இப்படியே வீணாய்ப் போய்க் கொண்டுதான் இருக்குமோ?” என்றெல்லாம் உள்ளுக்கு உள்ளாகவே கதறிக் கொண்டிருப்பார்.

**“உலப்பின் றாறெனும் அக்கரமும் கமழ்**
**கடப்பம் தாரும் முகப்ரபையும் தினம்**
**உளத்தின் பார்வை இடத்தின் நினைந்திட அருள்வாயே!**

**புனவிளம் தத்தைக் கிச்சை யுரைக்கும்**
**புரவலன் பத்தர்க்குத் துணை நிற்கும்**
**புதியவன் செச்சைப் புட்பமணக்கும் பலபாரப்**

**புயனெனும் சொற்கற் றுப்பிற கற்கும்**
**பசையொழிந் தத்தத் திக்கென நிற்கும்**
**பொருள்தொறும் பொத்தப் பட்டதொ ரத்தம் பெறுவேனோ”**

என அருணகிரிப் பெருமான் வேண்டிக் கொண்டார் அல்லவா? அந்த வேண்டுகோள் சுவாமிகளுக்குப் பயன் அளித்தது. எப்பொழுதும் குமார பரமேஸ்வரனைப் பற்றி தியானம்; அவனைப் பற்றிய பேச்சு; அவனைத் துதிக்கும் பாடல்களைப் பாடிக் கொண்டிருத்தல் இப்படியாகவே அவரது வாழ்நாள் ஊர்ந்து கொண்டிருந்தது.



அந்தக் கால கட்டத்தில் சுவாமிகள் பாடி அருளிய பாடல்களில் எத்தனை அரும் பெரும் தத்துவ விளக்கங்கள்! முருகப் பெருமானைப் பற்றிய அழகிய வருணனைகள் எத்தனை! கல்நெஞ்சையும் கரைக்குமாறு வெளியிட்டுள்ள வேண்டுகோள்கள் எத்தனை! யோக நுட்பங்கள் எத்தனை? அவற்றையெல்லாம் படித்து உணர்வதே பெரிய தவம்தான். இந்த தவத்தில் ஓர் அணு அளவு மட்டும் அன்பர்களுக்குத் தெரிவிக்கப் பெரிதும் முயற்சி செய்கிறேன்.

திருமலை எனும் தலத்து முருகப் பெருமானைப் பற்றிய பதிகம், திருக்கயிலாசமலை, சண்முகானந்த சிவம், நிட்களானந்த குகன், சரவணபவானந்தன், ஆனந்த முகில், குகப்பிரம்மம், பூரணானந்த குகன் எனப் பெயரிய பதிகங்கள் – இவையெல்லாம் மந்திரோபதேசம் பெற்றுக் கொண்ட பிறகு சுவாமிகள் பாடி அருளியவை ஆகும்.

**“பூரண வியோம மா நிறைவான தெய்வமே**
**பொறிகரணம் என்பவைகளுக்கு**
**அரிய, துரிய அதீத அறிவுச் சுகானந்த**
**ஆழியே, அன்பர் மன்னே” திருமலைப் பதிகம்**

அருவமும் உருவமும் நீத்த நிட்கள நிலையில் உணரப்படும் முருகப் பெருமான், சுவாமிகளால் இவ்வாறு அழைக்கப்படுகிறார்.


சிவத்தமிழ் குகமணி **தெ.தனபால்**
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


முருகப் பெருமானின் மெய்ம்மை அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய ஒன்பது செயல்முறைகளை ஒரு பாடலில் வரிசைப்படுத்திக் கூறுகிறார் சுவாமிகள்; அப்பாடலின் ஒன்பது பொருள் என்ன என்பதை மட்டும் இங்கு நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

தசை பொதிந்த அழுக்கான உடம்பிற்கும் உயிருக்கும் வாழ்வதற்குதவும் உணவுப் பண்டங்களில் ஒதுக்க வேண்டாதவற்றை உண்ணல், ஒதுக்க வேண்டியவற்றை உண்ணாமல் விடுதல், இறைவன் ஒருவனை மட்டும் மனத்தில் வழிபடுதல், உருவ மருட்சியால் வரும் அறிவு மயக்கமெல்லாம் ஒழித்தல், நல்லபத்தி மாறாமல் நிலைபெற்றிருத்தல், மற்றுமுள தன்மைகள் அனைத்தையும் நீக்குதல், மனத்தில் தன் குணம் கண்டு கவலை மிகுதி கொள்ளுதல், தன் குற்றம் பொறுக்கின்ற குணத்தைத் தேடுதல், தலைவராகிய இறைவன் வல்லமைக்குப் பொருந்தாத முறைகண்டு எப்பொழுதும் இரங்குதல் என்று கூறப்படும் தேன் சிந்தும் மலர் அடிக்கு



PART 3-1

அன்பர்தம் செய்கை ஒன்பதும் அறிவிற் சிறியவனாகிய நாம் மேற்கொள்ளுதல் என்றோ! என்று சுவாமிகள் விளக்குகிறார். இப்பாடல் சுவாமிகள் அருளிய முதல் மண்டலத்தில் 14ஆவது பதிகமாக திருக்கயிலாசமலை என்ற தலைப்பில் 4ஆம் பாடலில் உள்ளது. மேலும், இப்பதிகத்தில் சித்தர்களின் அருமை, பெருமைகளையும், பேராற்றல் களையும் சுவாமிகள் ஒரு கோவைப்படுத்திப் பாடினார்கள். இதுபோன்ற பாடலின் உட்கருத்தை உணர்வதற்கே அரிய மதிநுட்பம் வேண்டும். இது போன்ற செறிவு முதிர்ந்த பாடல்கள் பலவற்றையும் மனம் குளிர்ந்துள்ள போதெல்லாம் மலர்ச்சி பெற்று முருகப் பெருமான் மீது பாடியருளினார்.



முருகப் பெருமான் ஆறுமுகம் கொண்டு வேலாயுதம் தாங்கி, திருமயிலில் பல்வகை ஆபரணங்கள் பூண்டு, வள்ளி தேவயானை சமேதராகக் காட்சியளிக்கும் அருட் கோலத்தை அன்பர்கள் அனைவரும் கண்டிருப்பார்கள். ஆனால் அந்த உருவம் முதலானவற்றையும், உலகியலுக்கு அப்பாற்பட்ட அதீத நிலையில் எவ்வாறு உணர்ந்து காண வேண்டும் என்பதைச் சுவாமிகள் கூறுகின்ற விதமே ஒரு தனி அழகு. முருகப் பெருமானை உருவநிலையில் வைத்து வழிபடுபவர் அனைவரும், பூசை நிறைவில் தவறாமல் நிறுத்தி நிதானமாக ஓதிக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடலாகும் இது. இந்த அதீத நிலை விளக்கத்தை வேறு எந்த நூலிலும் காணமுடியாது. அந்த அதி அற்புதமான பதிகம் தான் சரவணபவானந்தன் பதிகத்தில் 5ஆவது பாடலாகும். அப்பாடல் பின்வருமாறு:

**“நீ நிமல குருவாய் வந்து நான் நிற்கும்**
**நிலைதரற்காம் உபாயம்**
**மலைவான புந்தியுழி அறிகிலேன்; மற்றொருவர்**
**வந்து வழி காட்டவும் இலை**
**வாரிதிகள் போலுள்ள நிகம ஆகமங்களும்**
**வழுத்துவது அனந்த பேதம்**
**தலைவனாம் உனைநம்பு நான் இங்ஙன்**
**என்செய்கேன்**
**அந்தோ, தயா நேமியே........”**

முருகப் பெருமானே தனக்கு முன் எதிர்ப்பட்டு, உபதேசிக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வெளிப்படுத்திப் பாடினார். முருகப் பெருமானைப் பற்றிய இடையறாத சிந்தனையும் இடையீடுபடாத தியானமும் இருந்தால் அன்றி இப்படியெல்லாம் பாடமுடியாது!

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் மனிதனாகப் பிறந்து மகானாக வாழ்ந்த அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அடிச்சுவட்டில் முழுவதும் பின்பற்ற முடியாத நிலை பலருக்கும் உண்டு. எது எப்படியிருந்தாலும் நாம் சுவாமிகளுடைய பாடல்களைக் கற்றுக் கொள்ள இந்த உடம்பைப் பயன்படுத்திக் கொண்டால் தீவினைகள் நிச்சயம் அகலும் என்பதில் ஒரு துளி அய்யமும் இல்லை என்பது முற்றிலும் உண்மை. இப்பாடல்களை எப்படி படிப்பது, யார் நமக்கு சொல்லிக் கொடுப்பார்கள் என்ற கேள்விகள்தான் உடனே நம் நினைவுக்கு வரும். இதற்கு அருமருந்தாக நவீன விஞ்ஞான உலகத்தில் உங்கள் வீட்டு இணையத்தில் www.pambanswamigal.org அல்லது www.pambanswamigal.net சென்று பார்த்தால் உங்கள் வீட்டுக் கணினி உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பாடலைப் பாடும் பணியாக நாம் கொண்டால் முருகப் பெருமான் நிச்சயம் நமக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று சுவாமிகள் நமக்காக முருகனிடம் வேண்டிக் கொண்ட விதமே மிக அதி அற்புதம். ஆகையால் நாமும் பாடும் பணியை, திருப்பணியாக மேற்கொண்டால் நமக்கும் முருகனிடமிருந்து வரம் கிடைக்கும் என்பதில் ஒரு துளி ஐயமும் இல்லை.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**